மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, திருவரங்கம் நகரசபையினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். வருமானம், மற்றவற்றைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பவற்றையும் தெரிந்துகொண்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சியை நகராட்சியாக்கும்போது, சென்னையிலே உள்ளது போல் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது மேயர் தேர்ந்தெடுக்கப் படுவது போன்ற முறை பின்பற்றப்படுமா அல்லது மதுரையின் அடிச்சுவடு பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: குழந்தை பிறந்ததற்குப்பிறகு பெயர் வைக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: திருவரங்கம் நகராட்சியிலிருந்து ஏற்கனவே ஒரு கோரிக்கை அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறதா? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சி நகராட்சியோடு இணைப்பதற்கு வேண்டிய தீர்மானத்தினை நிறைவேற்றியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை அறிந்த பிறகு தெரிவிக்கிறேன்.

மதுரை மாநகர எல்லைகள்.

*44 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர எல்லைகளை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆம். பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இதில் எந்த எந்தப் பகுதியை சேர்ப்பதாக உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியோடு சேர்ப்பதற்கு மதுரை மாநகராட்சி ஆணையர் பரிந்துரைத்துள்ளபகுதிகள், விளாங்குடி (பகுதி), தாத்தனேரி (பகுதி), செல்லூர் (முழுதும்), பீபிகுளம் (முழுதும்), தல்லாகுளம் (பகுதி), மானகிரி (முதல் பகுதி), சாத்தமங்கலம் (முழுதும்), வில்லாபுரம் (பகுதி), மாடக்குளம் (பகுதி), பொன்மேனி (பகுதி), ஆரப்பாளையம் (முழுதும்), சோக்கடை (பகுதி), ஆகியவை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படிச் சேர்க்கப்படுகின்ற பகுதி மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்வதற்கு வசதி இருக்கிறதா? காரணம், கார்ப்பரேஷன், டவுன்ஷிப், முனிசிப்பாலிட்டி போன்று உயர்த்துவதால், வரிகள்தான் அதிகமாக வாங்கப்படுகின்றனவே தவிர, வசதிகள் பெருக வில்லையென்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஏதாவது வசதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல இடங்களிலே, மாநகராட்சியோடு சேர்த்தால் வசதி வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு தீர்மானங்கள் அனுப்பியிருக்கிறார்கள். இதுபற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி ஆணையர், மாநகராட்சி ஆணையர் ஆகியவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, பரிசிலனை செய்யப்பட்டு, அதற்குப் பிறகு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: நகரங்கள் ஒவ்வொரு நாளும் விரிவடைந்துகொண்டே வருகின்றன. ஆகவே, நகர எல்லைகளிலே இருக்கின்ற கிராமங்களையும் சேர்க்கவேண்டியது அவசியமாகின்றது. அப்படி எல்லைகளிலே இருக்கின்ற கிராமங்களையும் சேர்க்க நிரந்தரமான நடைமுறை நிலைமைகள் ஏதாவது இருக்கின்றனவா? விரிவாக்குகின்ற நேரங்களில் அப்படி அந்தப் பகுதிகளையும் சேர்க்க நிரந்தரமான நடைமுறை, கொள்கை ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையானால் வருங்காலத்திலே வகுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சிறுசிறு கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய நிதிநிலை சரியில்லாத காரணத்தால் சிலபல இடங்களிலிருந்து நாங்கள் அவர்களோடு இணைந்து இருப்பது நல்லது என்றும், வேறு சில இடங்களிலிருந்து கஷ்டமாக இருக்கிறது. ஆகையினால் பிரிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை அனுப்புகிறார்கள். இந்த இரண்டையும் பரிசீலனை செய்து அவ்வப்போது என்ன என்ன வகையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளை எடுத்து, அதற்குப் பிறகுதான் அவைகளை சேர்ப்பதா அல்லது பிரிப்பதா என்று முடிவு செய்யப் படுகிறது.

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்.

*45 வினா—திரு. த. சோணையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் இரண்டாவது பி வகுப்பு ஒன்றியமாக எப்பொழுது மாற்றப் பட்டது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஊராட்சி கல்வி நிதி விசாரணைக்குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் 1—4—1972-லிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் இரண்டாம் தர ஒன்றியமாக மீண்டும் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

Procurement price of Paddy

* 46.*Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to refix the procurement price of paddy in the state?